# வழிகாட்டி

“நற்காரியத்திற்கும் இறையச்சத்துக்கும் உதவியாக இருங்கள்
பாவத்துக்கும் பகைமைக்கும் உதவியாக இருக்காதீர்கள்” (அல்குர்ஆன் 5:2)

இதழ் : 08 | துல்ஹஜ், 1432 | நவம்பர், 2011


## இஸ்லாமியப் புதுவருடம் தரும் சிந்தனைகள்

இஸ்லாமியப் புதுவருடம் 1433 ஓரிரு தினங்களில் மலரவிருக்கிறது. உலகெங்கும் பரந்து வாழும் பல கோடி முஸ்லிம்களின் தனித்துவத்தைப் பறைசாற்றும் இஸ்லாமிய வருடக் கணிப்பிற்கு ஒரு வரலாறு இருக்கிறது.

நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களின் காலத்திலும் அவர்களுக்குப் பின்வந்த கலீபா அபூபக்ர் றழியல்லாஹுஅன்ஹுஅவர்களின் காலத்திலும் வருடக் கணிப்பானது யானைப் படையினரின் வருகை, சூரிய கிரகணம், நபித்துவம் போன்ற முக்கிய நிகழ்வுகளை மையமாக வைத்தே மேற்கொள்ளப்பட்டது. நிலையான வருடக் கணிப்பொன்று இருக்கவில்லை.

ஆயினும் இரண்டாவது கலீபா உமர் றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் முஸ்லிம்களுக்கென்று தனித்துவமான ஆண்டுக் கணிப்பு இருக்க வேண்டும் எனக் கருதி, ஸஹாபாக்கள் பலரை அழைத்து கலந்துரையாடிய போது பலரும் பல்வேறு கருத்துகளை முன்வைத்தார்கள். நபியவர்களின் பிறப்பை ஆரம்பமாகக் கொண்டு வருடத்தைக் கணிக்கலாம் என்று சிலரும், நபியவர்களுக்கு நபித்துவம் கிடைத்த ஆண்டை முதல் ஆண்டாகக் கொண்டு வருடத்தைக் கணிக்கலாம் என்று சிலரும் கூற, மற்றும் சிலரோ நபியவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு மேற்கொண்ட ஹிஜ்ரத் பயணமே இஸ்லாம் உலகெங்கும் பரவ காரணமாக இருந்தமையால் அப்பயணத்தை அடிப்படையாகக் கொண்டு வருடத்தைக் கணிக்கலாம் என்று கூறியதும், அது ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றிலிருந்து நபியவர்கள் ஹிஜ்ரத் மேற்கொண்ட ஆண்டை முதல் ஆண்டாகக் கொண்டு இஸ்லாமிய ஆண்டு கணிக்கப்படுகிறது.

### தாஸூஆ, ஆஷூரா நோன்புகள்

இஸ்லாமிய வருடத்தின் முதல் மாதம் ‘அல்லாஹ்வின் மாதம்’ என்று நபியவர்களால் வர்ணிக்கப்பட்ட முஹர்ரம் மாதமாகும். இம்மாதத்தில் நாம் செய்ய வேண்டிய மிக முக்கியமான அமல் முஹர்ரம் மாதத்தின் 9ம் நாளிலும் 10ம் நாளிலும் நோன்பு நோற்பதாகும். ஒன்பதாம் நாள் நோன்பு தாஸூஆ நோன்பு என்றும் பத்தாம் நாள் நோன்பு ஆஷூரா நோன்பு என்றும் அழைக்கப்படுகின்றன.

நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் ஹிஜ்ரத் மேற்கொண்டு மதீனாவுக்கு சென்ற போது அங்கு வாழ்ந்த யூதர்கள் முஹர்ரம் மாதத்தின் 10ம் நாளில் நோன்பு நோற்றிருந்தார்கள். அதற்கான காரணத்தை நபியவர்கள் யூதர்களிடம் வினவிய போது, அத்தினத்தில்தான் தங்களது நபியாகிய மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் பிர்அவ்னின் கொடுமைகளில் இருந்து பாதுகாக்கப்பட்டதாகவும், அதை நினைவு கூரும் முகமாகவே நோன்பு நோற்பதாகவும் யூதர்கள் கூறிய போது நபியவர்கள் ‘அவ்வாறாயின் அத்தினத்தில் நோன்பு நோற்பதற்கு நாங்கள் மிகவும் தகுதியானவர்கள்’ என்று கூறி, முஹர்ரம் மாதம் 10ம் நாளில் நோன்பு நோற்பதை கடமையாக்கினார்கள். ரமழான் மாத நோன்பு கடமையாக்கப்படும் வரை ஆஷூரா நோன்பு நோற்பது முஸ்லிம்களுக்கு கடமையாக இருந்தது.

ஹிஜ்ரி 2ம் ஆண்டு ரமழான் நோன்பை அல்லாஹ் கடமையாக்கிய போது நபியவர்கள் ஆஷூரா நோன்பை ஸுன்னத்தாக ஆக்கினார்கள். ஆயினும் இதே ஆஷூரா நோன்பை அன்றைய யூதர்களும் நோற்றமையால் அவர்களுக்கு மாறுசெய்ய வேண்டும் எனக் கருதி, முஹர்ரம் மாதம் ஒன்பதாம் நாளிலும் பத்தாம் நாளிலும் நோன்பு நோற்குமாறு வலியுறுத்தினார்கள்.

ரமழான் மாத நோன்புக்கு அடுத்தபடியாக சிறப்புக்குரிய நோன்பு எது என நபியவர்களிடம் ஸஹாபாக்கள் வினவிய போது ‘அல்லாஹ்வின் மாதமான முஹர்ரம் மாதத்தில் நோற்கும் நோன்பு’ என குறிப்பிட்டார்கள் (ஸஹீஹ் முஸ்லிம், முஸ்னத் அஹ்மத்). ஆஷூரா நோன்பின் சிறப்புக் குறித்து நபியவர்களிடம் வினவப்பட்ட போது ‘அது கடந்த வருட பாவங்களுக்கு குற்றப்பரிகாரமாக அமையும்’ என குறிப்பிட்டார்கள் (ஸஹீஹ் முஸ்லிம்). மற்றுமொரு தடவை நபிகளார் குறிப்பிட்டார்கள்:

'நான் அடுத்த வருடம் உயிருடன் இருந்தால் (முஹர்ரம் மாதம்) ஒன்பதாம் நாளிலும் நோன்பு நோற்பேன்' (ஸஹீஹ் முஸ்லிம்).

அதே நேரம் ஒன்பதாம், பத்தாம் தினங்களில் நோன்பு நோற்க முடியாவிட்டால் பத்தாம் நாளிலும் பதினோராம் நாளிலும் நோன்பு நோற்க வேண்டும் என்ற கருத்து பலரிடம் காணப்படுகிறது. இது தொடர்பாக முஸ்னத் அஹ்மத், இப்னு ஹுஸைமா ஆகிய ஹதீஸ் நூல்களில், 'பத்தாம் நாளுக்கு முன்னுள்ள ஒன்பதாவது நாளில் அல்லது பத்தாம் நாளுக்குப் பின்னுள்ள பதினோராம் நாளில் நோன்பு நோற்றுக்கொள்ளுங்கள்' என்று ஒரு ஹதீஸ் காணப்படுகிறது. ஆயினும் இந்த ஹதீஸை அறிவிக்கும் அறிவிப்பாளர்களுள் ஒருவரான இப்னு அபீ லைலா என்பவர் பலவீனமானவர் என்பதால் இந்த ஹதீஸ் பலவீனமானது என பிரபல ஹதீஸ்கலை ஆய்வாளர்களான இமாம் நாஸிருத்தீன் அல்பானி, ஷுஐபுல் அர்னஊத், அப்துல்லாஹ் அல்பஸ்ஸான் ஆகியோர் குறிப்பிடுகின்றனர். இதன் அடிப்படையில் ஒன்பதாம் நாளிலும் பத்தாம் நாளிலும் நோன்பு நோற்பதே சரியான முடிவாகும்.

முஹர்ரம் மாதம் ஒன்பதாம், பத்தாம் தினங்களில் நோன்பு நோற்குமாறு மார்க்கம் வலியுறுத்துவதை ஒதுக்கிவிட்டு, சமூகத்திலுள்ள பலர் ஹுஸைன் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் கொலை செய்யப்பட்டதற்காக படுகொலை கத்தம் என்ற பெயரில் இத்தினங்களில் உண்டு களிப்பதைப் பார்க்கிறோம். நபிகளாரின் பேரன்புக்குரிய பேரரான ஹுஸைன் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் முஹர்ரம் மாதம் பத்தாம் நாள் கர்பலா களத்தில் கொலை செய்யப்பட்டமை முஸ்லிம்களைப் பொறுத்தவரை ஒரு துன்பமான நிகழ்வு என்பதில் அணுவளவும் ஐயமில்லை. ஹுஸைன் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் இவ்விதம் கொலை செய்யப்படுவார்கள் என்று நபியவர்கள் முன்னறிவிப்பும் செய்திருந்தார்கள். அவ்வாறிருந்தும் இத்தினங்களில் நோன்பு நோற்குமாறு நபியவர்கள் வலியுறுத்தியிருப்பதை முற்றாகப் புறக்கணித்து, கத்தம் என்ற பெயரில் இத்தினங்களில் உண்டு களிப்பது வழிகேடன்றி வேறில்லை. இவ்வாறு கத்தம் ஓதுகின்ற நிகழ்வை உருவாக்கியவர்கள் ஷீஆக்கள் எனப்படும் வழிதவறிய ஒரு கூட்டத்தினர் என்பதை அதிகம் பேர் அறியாதிருக்கிறார்கள்.

இதே வேளை முஸ்லிம் சமூகத்திலுள்ள மிக அதிகமானவர்கள் இஸ்லாமிய வருடம் பற்றியோ, இஸ்லாமிய மாதங்கள் பற்றியோ எதுவும் அறியாதிருக்கிறார்கள். ஆங்கில மாதங்களையும் தமிழ் மாதங்களையும் சரியாகச் சொல்லத் தெரிவது போன்று இஸ்லாமிய மாதங்களை சொல்லத் தெரிவதில்லை. பெரும்பாலான பாடசாலைகளில் கூட பிள்ளைகளுக்கு ஆங்கில மாதங்களும் தமிழ் மாதங்களும் மட்டுமே கற்பிக்கப்படுகின்றன.

வீடுகளில் கூட பிள்ளைகளுக்கு இஸ்லாமிய மாதங்கள் பெற்றோரால் சொல்லிக்கொடுக்கப்படுவதில்லை. ஆனால் நூற்றுக்கணக்கான படங்களினதும் நடிகர் நடிகையரினதும் விளையாட்டு வீரர்களினதும் பெயர்களை தடுமாற்றம் ஏதுமின்றி ஒப்புவிக்கும் ஆற்றலை (?) இன்றைய இளஞ் சிறார்கள் கூட பெற்றிருக்கிறார்கள். நமது இஸ்லாமிய உணர்வும் பற்றும் எங்கோ காணாமல் போய்விட்டன.

எனவே, மேற் குறிப்பிடப்பட்ட இஸ்லாமிய வருடக் கணிப்பின் பின்னணியிலுள்ள வரலாற்றையும் இஸ்லாமிய மாதங்களையும் நாமும் கற்று நமது பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுத்து இஸ்லாமிய உணர்வை உள்ளங்களில் ஆழமாகப் பதித்துக்கொள்வதோடு, எதிர்வரும் முஹர்ரம் ஒன்பதாம், பத்தாம் தினங்களில் நோன்பு நோற்று கடந்த வருடத்தில் நாம் செய்த பாவங்களுக்கான மன்னிப்பையும் இறையருளையும் பெற்றுக்கொள்வோமாக.

## ஏறாவூர் மட்/றஹ்மானியா வித்தியாலயத்தில் 3R & 6S செயற்றிட்டம்

2011ல் தேசிய ரீதியில் கல்வியமைச்சும் DFCC வங்கியும் பாடசாலைகளுக்கிடையில் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் நோக்கில் 30 பாடசாலைகளை தேர்ந்தெடுத்து 3R & 6S என்ற செயற்றிட்டத்தை அமுல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்காக கிழக்கு மாகாணத்தில் ஏறாவூர் மட்/றஹ்மானியா மகாவித்தியாலயம் தேர்ந்தெடுக்கப்பட்டு, 30 பாடசாலைகளுள் தற்போதைய பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய ரீதியில் பத்தாவது இடத்தைப் பிடித்துள்ளது. எதிர்வரும் 30ம் திகதி இறுதி மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படவுள்ளது. இதில் மட்/றஹ்மானியா மகாவித்தியாலயம் ஒன்றிலிருந்து மூன்றாம் இடத்துக்குள் வரலாம் என எதிர்பார்க்கப்படுவதாக இத்திட்டத்தின் மாவட்ட இணைப்பாளர் A. றியாஸ் ஆசிரியர் தெரிவித்தார்.

# சிலை வணக்கத்தின் அடிப்படை

ஹாபிழ் NLM. அஸ்மி (ஹாமி)

முஸ்லிம் சமூகத்திலுள்ள பலர் படைத்த இறைவனுடன் சேர்த்து நல்லடியார்களின் அல்லது நல்லடியார்கள் என்று தாங்கள் நினைப்பவர்களின் மண்ணறைகளை வழிபாட்டுத்தலமாக மாற்றி தங்கள் தேவைகளை முறையிட்டு வழிப்படுவதை பல பிரதேசங்களில் பரவலாகக் காணமுடிகிறது. இச்செயலானது முஸ்லிம் அல்லாதவர்கள் கடவுள்களை சிலைகளாக வடித்து, அவற்றை தெய்வமாக நினைத்து தமது தேவைகள் அனைத்தையும் முறையிட்டு வழிப்படுவதற்கு ஒப்பாக இருக்கிறது.

நாம் அல்குர்ஆனை ஆராய்ந்து பார்ப்போமானால் சிலை வணக்கத்தின் உண்மை நிலையை புரிந்து கொள்ளலாம். எந்தக் கடவுள்களை சிலைகளாக வடித்து வணங்குகிறார்களோ அவர்கள் ஒரு காலத்தில் மனிதர்களாக வாழ்ந்து மரணித்தவர்கள்தான். இதனை ஸூறா நூஹின் 23ம் வசனம் தெளிவுபடுத்துகின்றது.

'நீங்கள் வணங்கக்கூடிய கடவுள்களான வத்து, சுவா.·., யகூத், யஊக், நஸ்ர் போன்ற கடவுள்களை விட்டுவிடாதீர்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள்' - நூஹ் 23. இந்த வசனத்திற்கு விளக்கம் சொல்லக்கூடிய இப்னு அப்பாஸ் றழியல்லாஹுஅன்ஹுமா அவர்கள் மேற்கூறப்பட்ட கடவுள்களெல்லாம் நூஹ் நபி காலத்தில் வாழ்ந்து மரணித்த நல்லடியார்கள் என்று கூறுகின்றார்கள். நம்முடைய காலத்தை வைத்துப் பார்த்தால் புத்தரைக் குறிப்பிடலாம். அவர் ஒரு மனிதராக உலகத்தில் வாழ்ந்தார். இப்போது கடவுளாக வணங்கப்படுகின்றார்.

நூஹ் நபியின் காலத்தில் வாழ்ந்த ஸாலிஹான மனிதர்கள் மரணித்த பின் அவர்களின் மண்ணறையின் மீது குச்சியை அடையாளமாக நாட்டி வைக்கும்படி அந்த மக்களை ஷைத்தான் ஏவினான். அதேபோல் மக்களும் செய்தார்கள். அதன்பின் அந்த அடியார்களின் உருவப்படங்களை (சிலைகளை) அவர்களின் மண்ணறையின் மீது வைக்கும்படி ஏவினான். அப்படியே மக்களும் செய்தார்கள். அதன் பின் அடுத்த தலைமுறையினரிடம் இவர்களைத்தான் உங்கள் மூதாதையர்கள் வணங்கி வந்தார்கள், நீங்களும் வணங்குங்கள் என்று ஷைத்தான் கூறியதும் அப்படியே வணங்கி வழிபட ஆரம்பித்தார்கள். இப்படித்தான் சிலை வணக்கம் தோன்றியது. இதிலிருந்து மரணித்த நல்லடியார்களின் கப்ருகள்தான் காலப்போக்கில் கடவுள்களாக மாற்றப்பட்டுள்ளன என்பது தெளிவாகின்றது. இதை பின்வரும் ஹதீஸ்களும் தெளிவுபடுத்துகின்றன.

'நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் க.·.பாவிற்குள் நுழைந்தபோது இப்றாஹீம் அலைஹிஸ் ஸலாம், மர்யம் அலைஹஸ் ஸலாம் ஆகியோரின் உருவப்படங்களை கண்டார்கள். இப்றாஹிம் நபி தன் கையில் அம்பு ஒன்றை வைத்துக்கொண்டு குறி சொல்பவர் போன்ற காட்சியில் இருந்தார்கள் என்பதாக நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்' (புகாரி)

'யூதர்களையும், கிறிஸ்தவர்களையும் அல்லாஹ் சபிப்பானாக. (ஏனெனில்) அவர்கள் நபிமார்களின் கப்ருகளை வணங்குமிடமாக ஆக்கிக் கொண்டார்கள்' (புகாரி, முஸ்லிம்)

'உங்களுக்கு முன்பிருந்தவர்கள் நபிமார்களுடைய கப்ருகளை வணங்குமிடமாக ஆக்கிக் கொண்டார்கள். அதைப்போன்று நீங்களும் ஆகிவிடாதீர்கள்' (முஸ்லிம்)

'அல்லாஹ்விடத்தில் மறுமைநாளில் படைப்பினங்களில் மிகக் கெட்டவர்கள் இவர்கள்தான்' - புகாரி

எனவே, மேற்சொன்ன குர்ஆன், ஹதீஸ்களின் ஆதாரங்களின் படி ஒரு காலத்தில் நபிமார்களாகவும், நல்லவர்களாகவும் வாழ்ந்தவர்களைத்தான் மக்கள் தெய்வங்களாக எடுத்திருக்கிறார்கள் என்பது தெளிவாகின்றது.

இப்போது மேற்சொன்ன ஆதாரங்களின் அடிப்படையில் கப்ரு வழிபாட்டைப் பார்ப்போம். எவ்வாறு சிலை வணக்கம் உருவாகியதோ அதேபோன்றுதான் கப்ரு வழிபாடும் உருவாகியிருக்கின்றது. முன்னொரு காலத்தில் நல்லவர்களாக வாழ்ந்தவர்களைத்தான் அவர்களின் மரணத்திற்குப் பிறகு அவர்களுக்கு கப்ருகளை கட்டி வணக்க வழிபாடு செலுத்தி வருவதைக் காணலாம். சில பிரதேசங்களில் நல்லவர்களாக கருதப்பட முடியாதவர்கள் கூட இவ்வாறு மதிக்கப்படுகின்ற நிலை உருவாகியிருக்கிறது.

சிலை வணங்கிகள் நல்லடியார்களை உருவமாக வடித்து கடவுளாக நினைத்து வழிபடுகின்றார்கள். கப்ரு வழிபாடு செய்வோர் நல்லடியார்களுக்கு அல்லது நல்லடியார்கள் என்று அவர்கள் நினைப்பவர்களுக்கு கட்டடங்கள் கட்டி, போட்டோக்கள் கொழுவி வழிபடுகின்றார்கள். இதில் என்ன வித்தியாசம் இருக்கின்றது? மேலும் நாங்கள் கப்று வழிபாடு செய்வோரிடம் 'ஏன் நீங்கள் அல்லாஹ்வை விட்டு விட்டு இவர்களிடம் முறையிடுகின்றீர்கள்? ' என்று கேட்டால் 'நாங்கள் இவர்களை கடவுளாக நினைக்கவில்லையே இவர்கள் இறைவனுக்கு மிகவும் நெருக்கமானவர்கள். ஆதலால் எங்களின் தேவைகளை இவர்களிடம் முறையிட்டால் இறைவனிடம் பேசிப் பெற்று தருவார்கள்' என்று கூறுவார்கள். இதைத்தானே அன்று வாழ்ந்த சிலை வணங்கிகளும் சொன்னார்கள்.

'அவனை விடுத்து (மற்றவர்களை) பாதுகாவலர்களாக எடுத்துக் கொண்டவர்கள், அல்லாஹ்வின் பக்கம் எங்களை அவர்கள் நெருக்கி வைப்பார்கள் என்பதற்காகவே அவர்களை நாம் வணங்குகின்றோம் (என்று கூறுகின்றனர்)' (39:03)

இவர்கள் என்ன பதிலை சொல்கிறார்களோ அதைத்தான் அவர்களும் சொல்கிறார்கள். மேலும் சொல்லப்போனால் இவர்களை விட அவர்கள் அல்லாஹ்வை மிக அறிந்திருந்திருந்தார்கள்.

'அவர்கள் கப்பலில் ஏறி (ஆபத்தில் சிக்கி)க் கொண்டால் அவர்கள் முற்றிலும் அவனுக்கு வழிப்பட்டவர்களாக கலப்பற்றவர்களாக அல்லாஹ்வை அழைக்கின்றனர். அவன், அவர்களை கரையின்பால் (சேர்த்து) காப்பாற்றிய பொழுது மீண்டும் அவர்கள் இணைவைக்கின்றனர்' (29:65)

ஆனால் இன்றயை கப்ரு வழிபாடு செய்வோர் அல்லாஹ்வுடன் அவ்லியாக்களையும் அழைக்கின்றனர். அவர்கள் கஷ்டத்தில் அல்லாஹ்வை அழைக்கின்றார்கள். மகிழ்ச்சியில் இருக்கும்போது இணைவைக்கின்றார்கள். இவர்கள் இரண்டிலும் அல்லாஹ்வுடன் யாமுஹைதீன், யாசாதுலி, யாமீரா என்பார்கள். அல்லாஹ் கூறுகிறான்: 'அல்லாஹ்வுடன் நீங்கள் வேறு ஒருவரையும் அழைக்கவேண்டாம்' (72:18)

சிலை வணங்கிகள் சாமிக்குத் தேங்காய் உடைத்து பூஜை நடத்துகின்றார்கள். இவர்கள் அவ்லியாக்களுக்கு ஊதுபத்தி கொழுத்தி சாம்பிராணி பற்றவைத்து பூஜை செய்கிறார்கள். அவர்கள் கொடியேற்ற விழா நடத்துகிறார்கள். இவர்களும் கொடியேற்ற விழாவுக்காக புனித பயணம் மேற்கொள்கின்றார்கள். அவ்லியாவிடம் சென்று எண்ணெய் தடவுகிறார்கள், வெட்டுக்குத்தும் நடத்துகிறார்கள். இவர்களில் என்ன வேறுபாட்டைக் காணமுடிகின்றது?

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் எந்த விடயங்களை எச்சரித்தார்களோ அந்த விடயங்களை அவ்லியாக்கள் என்ற பெயரில் செய்து வருகிறார்கள். நபியவர்கள் கூறினார்கள். 'எனது கப்ரை விழாக் கொண்டாடும் இடமாக ஆக்காதீர்கள்' (அபூதாவூத்)

'க.்.பதுல்லாஹ், மஸ்ஜிதுன் நபவி, மஸ்ஜிதுல் அக்ஸா ஆகிய மூன்று பள்ளிவாசல்களைத் தவிர வேறு எங்கும் புனிதப் பயணம் மேற்கொள்ளக்கூடாது' என்றும் நபியவர்கள் எச்சரித்தார்கள் (புஹாரி, முஸ்லிம்)

நபியவர்களே தனது மண்ணறையை விழாக் கொண்டாடும் இடமாக ஆக்க வேண்டாம், மேலும் மேற்சொன்ன மூன்று பள்ளிகளையும் தவிர எங்கும் புனித பயணம் மேற்கொள்ளவேண்டாம் என்று சொல்லியிருக்கின்றார்கள் என்றால் அவ்லியாக்கள் என்ற பெயரில் விழாக்கொண்டாடலாமா? கொடியேற்றப்பள்ளி, ஜெய்லானி என்று புனித பயணம் மேற்கொள்ளலாமா? சிந்தித்துப் பாருங்கள். அல்லாஹ் இவர்களை விட்டும் இவர்களுடைய செயற்பாடுகளை விட்டும் மிகத்தூய்மையானவன். அல்லாஹ்வே அனைவரினதும் பாவ மன்னிப்பை ஏற்கக்கூடியவன்.

## வீதிகளின் அவல நிலை!

ஏறாவூரிலுள்ள பல வீதிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு மக்கள் நடமாட்டத்திற்கோ, வாகனப் போக்குவரத்திற்கோ பயன்படுத்த முடியாத அளவு சிதைவடைந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

பல்வேறு அரசியல்வாதிகள் இப்பிரதேசத்தில் இருந்தபோதும் கூட பல வருடங்களாக இவ்வீதிகள் புனரமைப்புச் செய்யப்படாமலிருப்பது விசனத்துக்குரிய விடயமாகும். பல வீதிகளில் குழிகள் விழுந்திருப்பதால், சிறு மழை பெய்தால் கூட நீர் தேங்கி நின்று இவ்வீதிகள் குளம் போன்று காட்சியளிக்கின்றன. இதனால் பாதசாரிகளும் வாகனங்களில் பயணிப்போரும் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

குறிப்பாக புன்னைக்குடா வீதியின் சில பகுதிகள், பெண்பாடசாலை வீதி, முனையவளவு வீதி, வாளியப்பா தைக்கா குறுக்கு வீதி, காட்டுப்பள்ளி வீதி, லெப்பை வீதி, மீராகேணி வீதி உட்பட மற்றும் பல வீதிகள் மிக மோசமாக சிதைவடைந்து காணப்படுகின்றன.

மழைக்காலம் தொடங்கியிருப்பதால் இவ்வீதிகள் ஊடாக பாடசாலை செல்லும் மாணவ, மாணவிகளும் வேலைகளுக்குச் செல்லும் பணியாளர்களும் தமது உடைகளை பாதுகாத்த வண்ணம் பாடசாலைகளுக்கோ, அலுவலகங்களுக்கோ செல்ல முடியாமல் பெரும் சிரமங்களை அனுபவிக்கிறார்கள். நீர் தேங்கி நிற்கும் இவ்வீதிகளில் செல்லும் போது அருகில் செல்லும் வாகனங்கள் காரணமாக ஆடைகளைப் பாதுகாக்க முடியாத நிலை ஏற்படுகிறது.

எனவே, எதிர்வரும் சில மாதங்கள் பெரும்பாலும் மழைக்காலமாக இருப்பதால், மக்கள் அதிகம் பயன்படுத்துகின்ற சில முக்கியமான வீதிகளையேனும் அடையாளப்படுத்தி, அவற்றைச் செப்பனிடவும் புனரமைப்புச் செய்யவும் பிரதேசத்திலுள்ள அரசியல்வாதிகள் தாமதிக்காமல் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

## இலங்கை நிருவாக சேவைப் பரீட்சையில் நால்வர் சித்தி

இம்முறை அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற இலங்கை நிருவாக சேவை திறந்த போட்டிப் பரீட்சையில் ஏறாவூரைச் சேர்ந்த நான்கு பேர் சித்தியடைந்துள்ளனர். MR. ஸியாஉல் ஹக், MAF. ஸியானா, IM. நிகாஸ், ACF. றமீஸா ஆகிய இந்நால்வரும் ஒரே தடவையில் சித்தியடைந்திருப்பது மகிழ்ச்சி தரும் விடயமாகும். இவர்கள் அனைவருக்கும் ஏறாவூர் தவ்ஹீத் ஜமாஅத் சார்பில் உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அகில இலங்கை ரீதியிலும் மிக முக்கியம் வாய்ந்த ஒரு பரீட்சையில் ஒரே பிரதேசத்தைச் சேர்ந்த நால்வர் ஒரே தடவையில் சித்தியடைந்திருப்பது உண்மையில் மகத்தான சாதனையாகும். இவர்களை ஊக்குவித்த பெற்றோர், ஆரம்பம் முதல் கற்பித்த ஆசிரியர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

அடுத்து நடைபெறவிருக்கும் நேர்முகப்பரீட்சையிலும் இந்நால்வரும் சித்தியடைந்து, எங்கு சென்றாலும் அல்லாஹ்வுக்குப் பயந்து நேர்மையோடும் சமூக உணர்வோடும் சேவையாற்ற வேண்டுமென பிரார்த்திக்கிறோம்.

# நபி வழியில் நம் தொழுகை

தொடர் 01

- ஹாபிழ் ARM. றிஸ்வான் -

தொழுகை என்பது நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் மூலமாக இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அல்லாஹ் வானுலகில் வைத்து வழங்கிய பரிசாகும். இஸ்லாத்தின் ஏனைய கடமைகள் யாவும் இவ்வுலகில் வைத்து கடமையாக்கப்பட்டுள்ள போது தொழுகையானது வானுலகில் வைத்து கடமையாக்கப்பட்டமையே தொழுகையின் முக்கியத்துவத்தையும் அதன் சிறப்பையும் எடுத்துக்காட்டப் போதுமானதாகும்.

ஒரு முஸ்லிமின் எந்த ஒரு அமலாக இருந்தாலும் அது அல்லாஹ்வால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமாயின், இரண்டு முன் நிபந்தனைகள் அவசியமாகும்:

1. 'அல்லாஹ்வுக்காக' என்ற தூய நோக்கோடு அவ்வணக்கம் நிறைவேற்றப்பட வேண்டும்.
2. நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் காட்டிய முறைப் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டும்.

இவ்விரு நிபந்தனைகளில் எது விடுபட்டாலும் அல்லாஹ்வினால் எந்தவொரு அமலும் - அது எவ்வளவு பேணுதலாக நிறைவேற்றப்பட்டாலும் - ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

தொழுகையை பேணுதலாகவும் உரிய நேரத்திற்கும் ஜமாஅத்தாகவும் தொழுவதற்கு நாம் எவ்வளவு கரிசனை செலுத்துகிறோமோ அவ்வாறே நபியவர்கள் தொழுத முறை பற்றி அறிந்து தொழுவதற்கும் கரிசனை செலுத்த வேண்டும். இல்லாவிடில் நாம் தொழும் தொழுகைகள் யாவும் அல்லாஹ்வினால் மறுமையில் நிராகரிக்கப்பட்டு விடும்.

தொழுகின்ற முறையை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே நபிகளார் பல்வேறு முறைகளை கையாண்டுள்ளார்கள். ஸஹாபாக்கள் முன்னிலையில் மதீனா பள்ளிவாசலின் மிம்பரில் ஏறி நின்று தொழுதுகாட்டியுள்ளார்கள். அவ்வாறு மிம்பரில் ஏறி நின்று தொழுது விட்டு நபியவர்கள் ''நான் இவ்வாறு செய்ததற்குக் காரணம் என்னை நீங்கள் பின்பற்ற வேண்டும் என்பதும் எனது தொழுகையை நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதுமாகும்'' என்று கூறினார்கள். (நூற்கள் : புஹாரி, முஸ்லிம் )

மட்டுமன்றி, ஸஹாபாக்கள் தொழும் போது நபியவர்கள் அவதானித்துக் கொண்டிருந்து, தொழுதுகொண்டிருக்கும் போதும் தொழுது முடித்ததற்குப் பின்னரும் அவர்கள் விட்ட பிழைகளை பல சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டி திருத்தியுள்ளார்கள். எனவே நபிகளார் தொழுத முறையை கற்றறிந்து, அவ்வாறு ஒவ்வொரு முஸ்லிமும் தொழுவது எவ்வளவு முக்கியமானது என்பது இதிலிருந்து தெளிவாகிறது. இதனால்தான் நபியவர்கள் கூறினார்கள் ''நான் தொழுவதை நீங்கள் எவ்வாறு கண்டீர்களோ அவ்வாறே தொழுது கொள்ளுங்கள்'' (நூல் : ஸஹீஹுல் புஹாரி)

நபிகளார் தொழுத முறையை மிக நுணுக்கமாக அவதானித்த ஸஹாபாக்கள் எந்த ஒளிவு மறைவுமின்றி நபிகளார் தொழுத முறை பற்றி பல நூற்றுக்கணக்கான ஹதீஸ்களை அறிவித்துள்ளார்கள். அவை அனைத்தும் ஹதீஸ் நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவ்வாறிருந்தும் நம்மில் பலர் நபிகளார் தொழுத முறை பற்றி அறிந்து பின்பற்றாமல், அதைப் பற்றி கரிசனை செலுத்தாமல், பரம்பரை பரம்பரையாக நமது பெற்றோர்களும் மற்றோர்களும் தொழுது வந்ததையே ஆதாரமாகக் கொண்டு செயற்பட்டு வருகிறோம். எம்மில் பெரும்பாலானவர்கள் நபிகளார் தொழுகையின் போது எப்படி றுகூஉ செய்தார்கள், எப்படி ஸுஜூது செய்தார்கள் என்பன போன்ற விடயங்களை ஹதீஸ்களின் வாயிலாக அறிந்து பின்பற்றுவதில்லை. உண்மையில் இது கவலைக்கும் மறுமையில் மிகப் பெரும் கைசேதத்துக்கும் உரிய விடயமாகும். அனைவருக்கும் வழிகாட்டியாக அனுப்பப்பட்ட நபியைப் பின்பற்றாமல் புறக்கணித்ததைப் பற்றி நாளை மறுமையில் அல்லாஹ் விசாரிக்கும் போது நாம் என்ன பதில் கூறப் போகிறோம்?

எனவேதான் நபிகளார் தொழுத முறை பற்றி ஹதீஸ் நூல்களில் கூறப்பட்டுள்ள ஆதாரபூர்வமான (ஸஹீஹான) ஹதீஸ்களையெல்லாம் ஒன்று திரட்டி இத் தொடர் கட்டுரை எழுதப்படுகிறது. இதற்காக முற்கால இமாம்கள் தொடங்கி தற்கால அறிஞர்கள் வரை எழுதப்பட்டுள்ள பல நூல்கள் உசாத்துணை நூல்களாகக் கொள்ளப்பட்டுள்ளன. தமது எழுத்துகளின் மூலம் உதவிபுரிந்த அத்தனை இமாம்கள், அறிஞர்களுக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ் தனது பேரருளை மறுமை நாள் வரை சொரிவானாக

யா அல்லாஹ்! உனது திருப்பொருத்தம் ஒன்றை மட்டுமே நாடி மேற்கொள்ளப்பட்ட எனது இச்சிறு முயற்சியை அங்கீகரிப்பாயாக! இத்தொடரில் கூறப்படவிருக்கும் விடயங்களை அனைவரும் பின்பற்றி நடந்து நாளை மறுமையில் நபிகளாரினதும் நல்லடியார்களினதும் கூட்டத்தில் நம்மை சேர்த்து விடுவாயாக! உண்மையை யார் கூறினாலும் அதை ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவத்தை நம் அனைவருக்கும் தந்து விடுவாயாக!

(இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்...)

# ஐயமும் தெளிவும்

**ஐயம்** : நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத் கூறி தொட்டு முத்தமிடுவது கூடுமா?

**-AB. முனவ்வறா, ஏறாவூர் 6A-**

**தெளிவு** : நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களின் பெயர் கூறப்பட்டதும் அவர்களுக்காக ஸலவாத் கூறுவது என்பது ஓர் உயர்ந்த வணக்கமாகும். அல்லாஹ் அல்குர்ஆனில் நபிகளார் மீது ஸலவாத் கூறுமாறு கட்டளையிடுகிறான் (33 : 56). நபியவர்கள் தன் பெயர் கூறப்படும் போது ஸலவாத் கூறுமாறு ஏவுகின்ற பல ஹதீஸ்கள் ஹதீஸ் நூல்களில் இடம்பெற்றுள்ளன. நபியவர்கள் கூறினார்கள்: 'என் கப்ரை விழா கொண்டாடும் இடமாக ஆக்கிவிடாதீர்கள். என் மீது ஸலவாத் கூறுங்கள். நீங்கள் எங்கிருந்து ஸலவாத் கூறினாலும் அது என்னை வந்தடையும்' (அபூ தாவூத்).

நபியவர்களின் பெயர் கூறப்பட்டும் கூட ஸலவாத் கூறாமலிருப்பது பாவம் என்பதை உணர்த்தும் பல ஹதீஸ்கள் காணப்படுகின்றன. நபியவர்கள் கூறினார்கள்: 'என் பெயர் கூறப்பட்டும் யார் என் மீது ஸலவாத் கூறவில்லையோ அவர் நாசமடையட்டும்' (திர்மிதி). நபிகளாரின் இந்த கடுமையான எச்சரிக்கை ஸலவாத் கூறுவதன் அவசியத்தை தெட்டத் தெளிவாக உணர்த்துகிறது.

ஆயினும் ஸலவாத் என்ற இந்த வணக்கத்தை செய்வதில் பல்வேறு பிழையான, மார்க்கத்துக்கு முரணான நடைமுறைகள் சமூகத்தில் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்றுதான் நபியின் பெயர் கூறப்பட்டவுடன் ஸலவாத் கூறி அல்லது ஸலவாத் கூறாமல் கையைத் தொட்டு முத்தமிடும் நடைமுறையாகும். நபி மீதுள்ள அன்பினால்தான் இவ்வாறு செய்வதாக இதைச் செய்வோர் கூறுகின்றனர். நபியை ஒருவர் தன் உயிரை விட நேசிப்பது கடமை என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. ஆனால் நம்மையெல்லாம் விட நபியவர்களை பன்மடங்கு அதிகமாக நேசித்தவர்கள் உத்தம ஸஹாபாக்கள். நபி மீது ஸலவாத் கூறுமாறு கட்டளையிடும் அல்குர்ஆன் வசனம் இறங்கியதும் ஸஹாபாக்கள் நபியவர்களிடம் வந்து 'யாரஸூலல்லாஹ்! தங்கள் மீது ஸலவாத் கூறுமாறு அல்லாஹ் எங்களுக்கு கட்டளையிட்டுள்ளான். நாங்கள் எவ்வாறு ஸலவாத் கூற வேண்டும்? ' என்று வினவினார்கள். அப்போது நபியவர்கள் அத்தஹிய்யாத்தில் இடம்பெறும் ஸலவாத்தை கற்றுக்கொடுத்தார்கள் (புஹாரி, முஸ்லிம்). இங்கு ஸஹாபாக்களின் உயர்ந்த ஒழுக்கத்தை பார்க்கிறோம். நபி மீது ஸலவாத் கூறுமாறு அல்லாஹ் கட்டளையிட்டுவிட்டான் என்பதற்காக ஸஹாபாக்கள் ஏதாவது ஒன்றை கூறி நபி மீதுள்ள அன்பை வெளிப்படுத்துவோம் என்று நினைக்கவில்லை. எவ்வாறு ஸலவாத் கூற வேண்டும் என்பதை நபியவர்களிடமே வந்து வினவுகிறார்கள். அப்போது ஸலவாத் வாசகத்தை கற்றுக்கொடுத்த நபிகளார் கையைத் தொட்டு முத்தமிடுமாறு கூறவுமில்லை, ஸஹாபாக்கள் அவ்வாறு செய்ததுமில்லை. நபி மீது கொண்ட நேசத்தினால் நபியவர்கள் வுழு செய்தபோது கீழே சிந்திய தண்ணீரைக்கூட பல தடவைகள் அள்ளிக்கொண்ட ஸஹாபாக்கள் இவ்வாறு ஸலவாத் கூறி கையைத் தொட்டு முத்தமிடவில்லை என்றால், நிச்சயமாக இந்நடைமுறை மார்க்கத்தில் இல்லாத ஒன்றாகும்.

கடந்த இரு வருடங்களுக்கு முன் ஒரு பாடசாலைக்கு சென்றிருந்த சமயம் அங்குள்ள மாணவ, மாணவியர் மத்தியில் உரையாற்றும் சந்தர்ப்பத்தில் நபியவர்களின் பெயரைக் கூறிய போதெல்லாம் பெரும்பாலான மாணவ, மாணவிகள் கையைத் தொட்டு முத்தமிட்டுக்கொண்டதை அவதானித்த போது ஆச்சரியமாக இருந்தது. நபியின் பெயர் கூறப்பட்டால் ஸலவாத் கூற வேண்டும் என்ற மார்க்க வழிமுறை முற்றாக புறக்கணிக்கப்பட்டு, சமூகத்திலுள்ள ஒரு பழக்கம் மாணவ, மாணவியர் மத்தியில் மார்க்கமாக அறிமுகமாகியிருப்பதை நினைத்த போது கவலையாக இருந்தது.
ஸலவாத் கூறுவதில் சமூகத்தில் காணப்படும் மற்றுமொரு பிழையான நடைமுறைதான் நபிகளார் கற்றுத்தராத வாசகங்களை ஸலவாத் என்ற பெயரில் கூறுவதாகும். நபியவர்கள் கற்றுத்தந்த முழுமையான ஸலவாத் அத்தஹிய்யாத்தில் வருகின்ற ஸலவாத் ஆகும். அதை தொழுகையில் மட்டுமல்ல, தொழுகைக்கு வெளியிலும் கூறலாம். அதை கூறும் போதுதான் நமக்கு நன்மை கிடைக்கிறது. அதை கூறாமல் வேறு வாசகங்களை ஸலவாத் என்ற பெயரில் எத்தனை தடவை கூறினாலும் எந்த ஒரு நன்மையும் கிடைக்கப் போவதில்லை. நபி கற்றுத் தந்த ஸலவாத்தை புறக்கணிப்பது நபியையே புறக்கணிப்பதாகும்.

சமூகத்தில் காணப்படும் மற்றுமொரு பிழையான நடைமுறை ஸலவாத்தை பாடலாக படிப்பதாகும். ஸலவாத் ஒரு வணக்கமாகும். பாடலாக படிக்கும் எந்தவொன்றும் வணக்கமாக முடியாது. ஸஹாபாக்கள் ஒரு போதும் ஸலவாத்தை பாடலாக படித்ததில்லை. பாடலாக படிக்கும் போது ஸலவாத் என்ற வணக்கத்தை கொச்சைப்படுத்துவதாகவும் இழிவுபடுத்துவதாகவுமே அமைகிறது. அல்லாஹ் மிகவும் அறிந்தவன்.

## மாதம் ஒரு துஆ

*நோயாளியை பார்வையிடச் சென்றால் அவருக்கு கூறுவது...*

لَا بَأْسَ طَهُورٌ إِنْ شَاءَ اللَّهُ

**லா ப(B)ஃஸ தஹூ°ருன் இன்ஷா அல்லாஹ்**

**பொருள்:** உங்களுக்கு இந்நோயினால் துன்பம் ஏதும் இல்லை. அல்லாஹ் நாடினால் இந்நோய் உங்களை பாவங்களிலிருந்து பரிசுத்தப்படுத்தும். (ஸஹீஹுல் புஹாரி, நஸாஈ)

# இறுதிப் பயணம் மறுமை

- அஷ்ஷெய்க் MIM. வபா (கபூரி) -

'உங்களில் நல்லமல்களில் சிறந்தவர்கள் யார் என்பதை பரீட்சித்துப் பார்ப்பதற்காகவே வாழ்வையும் மரணத்தையும் அவன் படைத்தான்' என்று அல்லாஹ் அல்குர்ஆனில் சூறா அல்முல்க் என்ற அத்தியாயத்தில் குறிப்பிடுகின்றான்.

'(நன்கு பாதுகாப்பாக) கட்டப்பட்ட கோபுரத்திலிருந்தாலும் மரணம் வந்தே தீரும்'

'ஒவ்வொரு ஆத்மாவும் மரணத்தை சுவைத்தே ஆகவேண்டும்' எனவும் அல்லாஹ் குறிப்பிடுகின்றான். எனவே ஒவ்வொருவரும் மரணமென்னும் கசப்பான அந்தப் பானத்தை அருந்தியே ஆகவேண்டும். இதிலிருந்து எவரும் தப்பி ஓடிவிடமுடியாது. அந்த மரணத்தை ஒவ்வொருவரும் எதிர்கொண்டு தான் ஆகவேண்டும். அதனைக்கண்டு பயப்படாது அதனை எதிர்பார்த்து வரவேற்கத்தயாராக ஆகிவிடவேண்டும். மரணத்திற்கு தயாராகுதல், அதனை வரவேற்கத் தயாராகுதல் என்பனவெல்லாம் இலேசான விடயமல்ல. யாரெல்லாம் தக்வா எனும் இறையச்சத்துடனும் இறை சிந்தனையோடும் இறை வழிபாட்டுடனும் சதாவும் மௌத்தை நினைத்தவராகவும் தவ்பா இஸ்தி.'.பார் செய்தும், இக்லாஸ், இஸ்திஹ்சானுடன் நல்லமல்கள் செய்தும் அதற்கான ஆயத்தங்கள் செய்தவராக வாழ்வாரோ அவரே மரணத்தை வரவேற்கத் தயாராகுவார். அவருக்கே மரணமென்பது பயமற்றதாகவும் வரவேற்கத்தக்கதாகவும் அமையும். இத்தகையோரைப் பற்றி அல்குர்ஆன் சூறா புஸ்ஸிலத்-30,31 பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

'(எனினும்) நிச்சயமாக எங்கள் இரட்சகன் அல்லாஹ்தான் என்று கூறி பின்னர் (அதன்மீது) நிலைத்துமிருந்தார்களோ அத்தகையோர் - அவர்களின் மீது மலக்குகள் (மரண வேளையில்) இறங்கி, (செல்ல இருக்கும் மறுமையைப்பற்றி) நீங்கள் பயப்படாதீர்கள். (மேலும் நீங்கள் இவ்வுலகில் விட்டுச்செல்லும் மனைவி, மக்கள், சொத்து சுகம் யாவற்றையும் பற்றி) கவலைப்படாதீர்கள். நீங்கள் வாக்களிக்கப் பட்டுக்கொண்டிருந்தீர்களே அத்தகைய சுவனபதியைக்கொண்டு நன்மாராயம் பெறுங்கள் (எனக்கூறுவார்கள்)' நாங்கள் உலக வாழ்விலும் மறுமையிலும் உங்களுக்கு உதவியாளர்கள். அ(ச்சுவனத்)தில உங்கள் மனம் விரும்பியவை உங்களுக்குண்டு. இன்னும் அதில் நீங்கள் தேடுகின்றவையும் உண்டு என்றும் மலக்குகள் கூறுவார்கள்.

மேலும் சூறா அல்பஜ்ர் என்ற அத்தியாயதில் (27, 28 வசனங்கள்) '(அல்லாஹ்வின் கட்டளைகளை உண்மைப்படுத்துவது கொண்டு) அமைதி பெற்ற ஆத்மாவே, நீ உனது இரட்சகனின் பக்கம் (அவனைத்) திருப்தியடைந்த நிலையிலும், (அவனிடம்) நீ பொருந்திக் கொள்ளப்பட்ட நிலையிலும் மீள்வாயாக. (என்று மலக்குகள் அழைப்பார்கள். இதே நேரம் அல்லாஹ்வும் இத்தகயவரைப் பார்த்து) 'நீ எனது நல்லடியார்களது கூட்டத்தில் நுழைந்துவிடு. இன்னும் எனது சுவனத்திலும் நுழைந்து விடுவாயாக' என்று அழைப்புவிடுப்பான்'. இதுதான் பாக்கியங்களிலெல்லாம் மாபெரும் பாக்கியம்.

மாறாக யாரெல்லாம் ஆகிறாவை மறந்து மௌத்தை- மறுமைவாழ்வை நினைத்தும் பார்க்காது இவ்வுலக ஆசாபாசத்தில் மூழ்கி படைப்பாளன் அல்லாஹ்வை மறந்தும் அவனது கடமைகளை மறந்தும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்களோ அத்தகையவர்களுக்கு மரணம் பயமாகவும் வெறுப்பாகவும் கசப்பாகவுமிருக்கும். அவர்களது மரண நேர நிலைமையும் கடுமையான பயங்கரமாக இருக்கும். சூறா அல்அன்பாலில் அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்: 'நிராகரிப்போரின் உயிர்களை மலக்குகள் கைப்பற்றும் சமயத்தில் (நபியே!) நீர் பார்ப்பீராயின் பயங்கர நிலையிலேயே நீர் பார்ப்பீர். மலக்குகளான அவர்கள் அவர்களின் முகங்களிலும் அவர்களின் பின்புறங்களிலும் அடிப்பார்கள். மேலும் அவர்கள் எரிக்கும் (நரக) வேதனையைச் சுவையுங்கள் (என்றும் கூறுவார்கள்).

( இன்ஷா அல்லாஹ் தொடரும் )

## ஆக்கங்கள் கோரப்படுகின்றன

ஏறாவூர் தவ்ஹீத் ஜமாஅத்தினால் மாதாந்தம் வெளியிடப்படும் **வழிகாட்டி** இதழுக்கு வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் கோரப்படுகின்றன. துறை சார்ந்தோர், அறபுக்கல்லூரி மற்றும் பாடசாலை மாணவ, மாணவிகள் மார்க்கம் தொடர்பான மற்றும் பொதுவான ஆக்கங்கள், பிரதேச செய்திகள், பொது அறிவுத் துணுக்குகள் போன்றவற்றை அனுப்பிவைக்க முடியும். மார்க்கம் தொடர்பான ஆக்கங்களாயின் அல்குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்கள் குறிப்பிடப்பட வேண்டும். ஏனைய பொதுவான ஆக்கங்கள், துணுக்குகளாயின் அவை பெறப்பட்ட நூல்கள் மற்றும் விபரங்கள் குறிப்பிடப்பட வேண்டும். தரமானவை பிரசுரிக்கப்படும். அனுப்ப வேண்டிய முகவரி :

**தவ்ஹீத் ஜமாஅத்.**
**த.பெ. இல: 02**
**ஏறாவூர்**


**மாதம் தோறும் புத்தகப்பரிசை வழங்குவோர்:**

**ஏறாவூர் மணிக்கூட்டுக் கோபுர சந்தியில் அமைந்துள்ள,**

**யூரோ போன் வேர்ல்ட்,**

**இல.17, பிரதான வீதி, ஏறாவூர்**

Mobile: 077 8777774
Fax: 065 2240283

**மட்டக்களப்பு - கொழும்பு சொகுசு பஸ் சேவை (குளிரூட்டப்பட்ட) ஆசனம் இங்கு பதிவு செய்யப்படும்.**


## ஐயமும் தெளிவும்

மார்க்கம் தொடர்பான உங்கள் கேள்விகளையும் ஐயங்களையும் எழுதி அனுப்புங்கள். அல்குர்ஆன், ஆதாரபூர்வமான ஹதீஸ்களின் அடிப்படையில் அவற்றுக்கு பதில் அளிக்கப்படும். கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி :

தவ்ஹீத் ஜமாஅத்,
த.பெ. இல: 02
ஏறாவூர்

## பெறுமதியான புத்தகப் பரிசை வென்று தரும் ஏழு கேள்விகள்

1. அல்லாஹ்வின் மாதம் என்று நபியவர்களால் வர்ணிக்கப்பட்ட இஸ்லாமிய மாதம் எது?
2. நூஹ் நபியின் காலத்தில் நல்லடியார்களாக வாழந்து கடவுளாக்கப்பட்டவர்களுள் இருவரின் பெயர்களைத் தருக.
3. நோயாளியை பார்வையிடச் சென்றால் ஓதும் துஅவை தமிழில் அல்லது அரபியில் குறிப்பிடுக.
4. தற்போதைய உலக சனத்தொகை யாது?
5. நபியின் பெயர் கூறப்பட்டும் ஸலவாத் கூறாதவர் பற்றி நபியவர்கள் என்ன கூறினார்கள்?
6. நபியவர்கள் மதீனாப்பள்ளியில் மிம்பரில் ஏறி நின்று தொழுது காட்டியதன் காரணம் யாது?
7. இவ்வருடம் நடைபெற்ற சார்க் உச்சிமாநாடு எந்த நாட்டில் நடைபெற்றது?

இக் கேள்விகளுக்கான விடைகளை இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் **15.12.2011** க்கு முன்னர் எழுதி அனுப்புங்கள். சரியான விடைகளை எழுதுவோரில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுவோருக்கு பெறுமதியான புத்தகப் பரிசு வழங்கப்படும். ஏனைய ஐவரின் பெயர்கள் அடுத்த இதழில் வெளியிடப்படும். விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி : **தவ்ஹீத் ஜமாஅத், த.பெ.இல. 02, ஏறாவூர்.**

### *கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சரியான பதில்களை எழுதி வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டோர்:*

**1ம் இடம் : MSM.றிபான், 96A/4, வாசிகசாலை வீதி, ஏறாவூர் 01**

**2ம் இடம் : RM. அஜ்மல், கிராம கோர்ட் வீதி, ஏறாவூர் 06D**

**3ம் இடம் : MIM. நஸ்லிம், 84/A, தைக்கா வீதி, ஏறாவூர் 01A**

**பாராட்டைப் பெறும் ஐவர்:**

1. JF. மஸாஹிறா, 95A/4, வாசிகசாலை வீதி, ஏறாவூர் 01
2. UL. ஸிறாஜுதீன், 182, முகாந்திரம் வீதி, ஏறாவூர் 06A
3. AR. அப்றார் அஹ்மத், 194, ஜிப்ரி தைக்கா வீதி, ஏறாவூர் 03
4. BM. றாஸித், 680, புன்னக்குடா வீதி, ஏறாவூர் 03
5. RM. அர்ஷாத், கிராம கோர்ட் வீதி, ஏறாவூர் 06D

### கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான விடைகள் :

1. ஸூறா அஸ்ஸா∴ப்பாத்
2. நபியவர்களும் ஸஹாபாக்களும் அறபா மைதானத்தில் திரண்டிருந்த வேளை /அறபா 9ல்
3. தொழுமிடத்தை நெருங்க வேண்டாம்
4. தெற்காசிய கடற்கரை விளையாட்டுப் போட்டி
5. வட்டி
6. துல்ஹஜ் 11, 12, 13
7. கேணல் முஅம்மர் கடாபி